# March 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழ் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் எழுதிய 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' என்ற நூலுக்கு 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டது.

(i) நாட்டின் உயரிய இலக்கிய விருது சாகித்திய அகாதெமி விருது ஆகும். ஒவ்வோர் ஆண்டும் இலக்கிய படைப்பாளிகளுக்கு மத்திய அரசால் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. இதில் பரிசுத் தொகையாக ரூ.1 லட்சமும், பட்டயமும் வழங்கப்படுகிறது. தமிழ் உள்ளிட்ட 24 மொழிகளில் சிறுகதை, நாவல், இலக்கியம், விமர்சனம் போன்ற பிரிவில் எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. 2025-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுப் பட்டியல் திங்கள்கிழமை (மார்ச் 16) வெளியிடப்பட்டது. தமிழ் மொழியில் வெளியான 'தமிழ்ச் சிறுகதையின் தடங்கள்' என்ற நூலுக்கு எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வனுக்கு சாகித்திய அகாதெமி விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது.

(ii) சாகித்திய அகாதெமி விருது அறிவிக்கப்பட்டுள்ள 'தமிழ்ச்சிறு கதையின் தடங்கள்' எனும் நூல் 1913 -1970 வரையிலான தமிழ்ச் சிறுகதை உலகின் பரிமாண வளர்ச்சியை விரிவாக ஆராயும் 900 பக்கங்களுக்கு மேலான ஒரு முக்கியமான ஆவணமாகும். பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ள இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறுகதைகளின் வேர்கள், போக்குகள் மற்றும் படைப்பாளிகள் குறித்து ஆராய்கிறது.

2. பிரான்ஸில் அமெரிக்கா -சீனா வர்த்தகப் பேச்சு நடைபெற்றது. இது அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2 வாரங்களில் சீனாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ள வழிவகுத்துள்ளது.

(i) அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட், சீன துணைப் பிரதமர் ஹி லீஃபாங் ஆகியோர் தலைமையில் பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் இந்தப் பேச்சுவார்த்தை தொடங்கியதாக சீன அரசு செய்தி முகமை தெரிவித்தது. 2 நாள்கள் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

(ii) முன்னதாக அமெரிக்க விவசாயிகள், தொழிலாளர்கள், வணிகங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் சீனாவுடன் பேசப்படும் என்று பேச்சுவார்த்தை தொடங்கும் முன் ஸ்காட் பெசன்ட் தெரிவித்தார்.

(iii) பேச்சுவார்த்தையில் அமெரிக்கா-சீனா பரஸ்பர நலன் சார்ந்த வர்த்தகம் மற்றும் பொருளாதார விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படும் என்று சீன வர்த்தக அமைச்சகம் தெரிவித்தது.

(iv) 16 நாடுகளின் நியாயமற்ற வர்த்தக அமெரிக்க நடைமுறைகள் உற்பத்தியை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதைக் கண்டறியும் நோக்கில், புதிய விசாரணையை அமெரிக்கா தொடங்கியது. அத்துடன் வேலை செய்வோரின் விருப்பத்துக்கு மாறாக அவர்களைக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கி, சீனா உள்ளிட்ட நாடுகள் ஏற்றுமதி செய்வதற்கு எதிராகவும் அமெரிக்கா விசாரணையைத் தொடங்கியது.

- இதுகுறித்து சீன வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், 'அமெரிக்காவின் புதிய விசாரணை குறித்து ஏற்கெனவே சீனா கவலை தெரிவித்துள்ளது. இந்த விசாரணைகள் மூலம் அமெரிக்கா தவறுக்கு மேல் தவறு செய்து வருகிறது. இது உலகளாவிய விநியோக முறையின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை கடுமையாகப் பாதிக்கும்' என்று தெரிவித்தது.

3. மேற்காசிய போர் காரணமாக கப்பல் போக்குவரத்து மற்றும் விநியோகம் தடைபட்டுள்ளதால், கடும் பாதிப்பை எதிர் கொண்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கான உதவித் திட்டங்கள் இந்த வாரத்தில் அறிவிக்கப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) அமெரிக்க, இஸ்ரேல் கூட்டு படைகள் தாக்குதலைத் தொடர்ந்து, சரக்கு கப்பல்களின் முக்கிய வழித் தடமான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதனால், சரக்கு கப்பல்களின் போக்குவரத்து முழுமையாக தடைப்பட்டதால், கப்பல்களிலும், துறைமுகங்களில் சரக்குகள்

தேக்கமடையும் நிலை உருவாகியுள்ளது. இதனால், ஏற்றுமதியாளர்கள் கடும் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளனர். இவர்களுக்கு உதவ மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

(ii) இதுகுறித்து மத்திய வர்த்தகச் செயலர் ராஜேஷ் அகர்வால் கூறுகையில், 'இந்த இக்கட்டான நேரத்தில் ஏற்றுமதியாளர்களுக்கு ஆதரவு அளிப்பதற்காக மத்திய வர்த்தகத் துறை என்னென்ன நடவடிக்களை மேற்கொள்ளது என்பது குறித்த விவரம் இந்தவாரத்தில் வெளியிடப்படும். குறிப்பாக, காப்பீடு ஆதரவு உள்ளிட்ட புதிய நிவாரண திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன' என்றார். இதுகுறித்து அண்மையில் தெரிவித்த மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல், 'ஏற்றுமதியாளர்களுக்கு காப்பீடு ஆதரவு உள்ளிட்ட புதிய நிவாரணத் திட்டங்களை வகுப்பது குறித்து மத்திய அரசு திட்டமிட்டு வருகிறது. இதுதொடர்பாக ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனம் (இசிஜிசி) மற்றும் பிற துறைகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கப்பலில் சரக்குகள் ஏற்றப்பட்டு அனுப்ப முடியாமல் பாதிப்பைச் சந்திக்கும் ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்கான அனைத்து வழிகளையும் அரசு ஆராய்ந்து வருகிறது. நிலைமையை 24 மணி நேரமும் அரசு கண்காணித்து வருகிறது' என்றார்.

4. பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தின்கீழ் மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் சிறப்பு வகை

மோட்டார்களை (இழுவை மோட்டார்கள்) இறக்குமதி செய்வதற்கான காலஅவகாசத்தை ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது. முன்னதாக அரியவகைவகை கனிமங்களை பயன்படுத்தி சீனாவில் தயாரிக்கப்படும் இழுவை மோட்டார்கள் இறக்குமதியை குறைத்து உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், இதற்கான தடை 2025, செப்டம்பர் வரை விதிக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு 2026, மார்ச் வரை இது நீட்டிக்கப்பட்டது.

(i) இதைத்தொடர்ந்து, ரூ.10,900 கோடி மதிப்பிலான பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தின்கீழ் மின்சார சரக்கு வாகனங்கள் (என்2/ என்3) மற்றும் பேருந்துகளில் (எம்2/எம்3) பயன்படுத்தப்ப கனிடும் இழுவை மோட்டார்களை ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(ii) இது தொடர்பான அறிவிக்கைகளை மார்ச் 13-ஆம் தேதி மத்திய கனரக தொழில்துறை அமைச்சகம் வெளியிட்டது. இதையடுத்து, செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் இழுவை மோட்டார்கள் இறக்குமதிக்கு தடை விதிக்கப்படுகிறது.

மின்சார வாகனங்கள், மின்னணுப் பொருட்கள், வான்வெளி மற்றும் பசுமை எரிசக்தி ஆகியவற்றுக்கு பயன்படுத்தப்படும் அரிய வகை கனிமங்களை சீனாவில் இருந்து இறக்குமதி செய்வதை குறைக்க மத்திய அரசு தொடர்ந்து முயற்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

5. இந்தியாவில் மதச்சுதந்திரம் மோசமான நிலையில் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதுகுறித்து அமெரிக்க அரசின் சர்வதேச மத சுதந்திரத்துக்கான ஆணையம் (யுஎஸ்சிஐஆர் எஃப்) வெளியிட்டுள்ள வருடாந்திர அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

(i) 2025-ஆம் ஆண்டில் இந்தியாவில் மத சுதந்திரம் தொடர்ந்து மோசமடைந்து இருந்தது. இந்திய அரசு மத சிறுபான்மையிடுரையும், அவர்களின் வழிபாட்டு தலங்களையும் குறிவைத்து சட்டத்தை கொண்டு வந்து அமல்படுத்தியது. பல்வேறு மாநிலங்கள், மத மாற்றத்துக்கு எதிரான சட்டங்களை கொண்டு வந்தது. மேலும் அதை வலுப்படுத்தியது. இதில் கடுமையான தண்டனையும் அடங்கும்.

(ii) நாடு முழுவதும் அரசு அதிகாரிகள் மத அகதிகளை சட்ட விரோதமாக நாட்டை விட்டு வெளியேற்றியதுடன் அவர்களை கைதும் செய்தனர். மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள் சகித்து கொள்ளப்பட்டன.

(iii) முஸ்லிம்கள் அதிகம் வாழும் காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஹிந்து சுற்றுலா பயணிகளை குறிவைத்து லஷ்கர் பயங்கரவாதிகள் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர். இது இந்தியா-பாகிஸ்தான் இடையே 5 நாள் மோதலுக்கு வித்திட்டது. மேலும்

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான எண்ணத்தை ஏற்படுத்தியதோடு, அவர்கள் மீது தாக்குதலுக்கும் வழிவகுத்தது.

(iii) இந்தியாவில் குழுத் தாக்குதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. ஆதலால் இந்தியாவை குறிப்பிட்ட ஒரு தரப்பினருக்கான நாடாக வரையறுக்க வேண்டும். சிறுபான்மையினர் மீதான தாக்குதலுக்கு காரணமான ராஅ மைப்பு (இந்திய உளவுத் துறை) மற்றும் ஆர்எஸ்எஸ் போன்ற அமைப்புகளுக்கு தடை விதிக்க வேண்டும். அவற்றுக்கு சொந்தமான சொத்துகளை முடக்குவது அல்லது அவற்றை சேர்ந்தோர் அமெரிக்காவுக்கு வர தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) அமெரிக்க அரசால் ஏற்படுத்தப்பட்ட யுஎஸ்சிஐஆர்எஃப் அமைப்பு, சுதந்திரமாக செயல் படக்கூடியது. அந்த அமைப்பு உலகநாடுகளில் மத நிலவரங்கள் குறித்து ஆய்வு செய்து, அதுதொடர்பான கொள்கையை வகுக்க அமெரிக்க அதிபர், வெளியுறவுத் துறை அமைச்சர், அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு பரிந்துரைகள் அளிக்கும்.

(v) இந்தியா மறுப்பு: யுஎஸ்சிஐ ஆர்எஃப் குற்றச்சாட்டுக்கு இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வெளியுறவு செய்தித் தொடர்பாளர் ரண் தீர் ஜெய்ஸ்வால் கூறுகையில், 'யுஎஸ்சிஐஆர்எஃப் அண்மையில் வெளியிட்ட அறிக்கையை இந்தியா கவனத்தில்கொண்டது. அதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் ஒருதரப்பினருக்கானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது.

6. 24 மணி நேரத்தில் தபால் சென்றடைவதை உறுதிப்படுத்தும் 24 விரைவு தபால்' சேவையை மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தொடங்கிவைக்கிறார்.

(i) முதல்கட்டமாக தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு மற்றும் ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இச்சேவை அறிமுகப்படுத்தப்படுகிறது.

(ii) இதுகுறித்து மத்திய தொலைத்தொடர்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'அதிமுக்கிய மற்றும் அவசரமாக அனுப்பப்படும் தபால்கள் அடுத்த நாளே சென்றடைவதை உறுதிப்படுத்தும் '24 விரைவு தபால்' சேவையை மார்ச் 17-ஆம் தேதி துறைசார் அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா மற்றும் இணையமைச்சர் சந்திர சேகர் பெம்மசானி தொடங்கிவைக்கின்றனர். இத்துடன் 2 நாள்களில் தபால் சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் 48 விரைவு தபால்' சேவையும் 6 முக்கிய நகரங்களில் அறிமுகப்படுத்தப்படுகிறது.

(iii) ஒரு முறை பயன்படுத்தப்படும் கடவுச்சொல் (ஓடிபி), குறுஞ்செய்தி எண்ட் டு எண்ட் என்கிரிப்ட் வசதி, வணிக நுகர்வோர்களுக்கான பின்னர் பணம் செலுத்தும் வசதி (பிஎன்பிஎல்), ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையில் மேற்கொள்ளப்படும் முன்பதிவுகளுக்கு இலவச சலுகைகள், ஏபிஐ ஒருங்கிணைப்பு மற்றும் பில்லிங், விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டால் பணம் திருப்பியளிக்கப்படுவதற்கான உத்தரவாதம் போன்ற அம்சங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

7. கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் மற்றும் கடன் மீட்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களிவ் நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வுகாண நடப்பாண்டில் 4 சிறப்பு லோக் அதாலத்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

(i) இது தொடர்பாக, மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்து அவர் கூறியதாவது:

- கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் மற்றும் கடன் மீட்பு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயங்களின் முன்நிலுவையில் உள்ள வழக்குகளில் பெரும்பாலானவை ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்புடையவையாகும். கிட்டத்தட்ட 71 சதவீதவழக்குகள் அதிகமதிப்பு கொண்டவையாக உள்ளன.
- நிலுவை வழக்குகளுக்குத் தீர்வுகாண இருமுனை உத்தியை மத்திய அரசு ஏற்றுள்ளது. முதலாவது, ரூ.100 கோடி மற்றும் அதற்கு மேலான மதிப்பு கொண்ட வழக்குகளை விசாரிக்க பிரத்யேக கடன் மீட்பு தீர்ப்பாயங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

- இரண்டாவது, மாற்று வழிமுறைகள் அதாவது லோக் அதாலத் போன்ற தளங்களின் வாயிலாக பிரச்னைகளுக்குத் தீர்வுகாண வங்கிகள் மற்றும் நிதிசார் நிறுவனங்களை ஊக்குவிப்பதாகும்.
- இந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, கடன் மீட்பு வழக்குகளுக்காகவே சிறப்பு லோக் அதாலத்களை ஏற்பாடு செய்வது குறித்து இந்திய தேசிய சட்டப் பணிகள் ஆணையத்துடன் மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.
- தேசிய லோக் அதாலத் தவிர, நடப்பாண்டில் கடன் மீட்பு வழக்குகளுக்குத் தீர்வுகாண 4 சிறப்பு லோத் அதாலத்களை நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் நிலுவை வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காண முடியும் என்றார் நிர்மலா சீதாராமன்